# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 8, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பிரதமர் நரேந்திர மோடியின் ஜகார்த்தா பயணத்தின் போது இந்தியா மற்றும் இந்தோனேசியா இடையே முக்கிய பாதுகாப்பு மற்றும் உத்திசார் கூட்டாண்மை ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

   i. வரலாற்றுச் சிறப்புமிக்க ஏவுகணை ஒப்பந்தம்

   - இந்தியாவின் பிரம்மோஸ் (BrahMos) ஏவுகணைகள் மற்றும் அஸ்த்ரா (Astra) வான்-க்கு-வான் ஏவுகணைகளை வாங்க இந்தோனேசியா அதிகாரப்பூர்வமாக ஒப்பந்தம் செய்துள்ளது.
   - இந்த ஒப்பந்தத்தின் மதிப்பு ₹5,692 கோடி (தோராயமாக 600 மில்லியன் டாலர்) ஆகும்.
   - பிரதமரின் முன்னிலையில் ஒரு முக்கிய ஏவுகணை ஏற்றுமதி ஒப்பந்தம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
   - ஏற்கனவே இந்தியாவுடன் இதேபோன்ற ஏவுகணை கொள்முதல் ஒப்பந்தங்களை மேற்கொண்ட வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் வரிசையில் இந்தோனேசியாவும் இணைந்துள்ளது.
   - பாலகோட் (புல்வாமா) தாக்குதல்களைத் தொடர்ந்து இந்தியா மேற்கொண்ட 'ஆபரேஷன் சிந்தூர்' (Operation Sindoor) நடவடிக்கையில் இந்த ஏவுகணை அமைப்புகள் முக்கிய பங்கு வகித்தன.

   ii. இருதரப்பு ஒப்பந்தங்கள்

   - இரு நாடுகளுக்கும் இடையே மொத்தம் 14 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.
   - கல்வி, சுகாதாரம், தொழில்நுட்பம், உணவுப் பாதுகாப்பு, மருந்து உற்பத்தி, கடல்சார் பாதுகாப்பு, முக்கிய கனிமங்கள் மற்றும் எஃகு விநியோகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளை இந்த ஒப்பந்தங்கள் உள்ளடக்கியுள்ளன.
   - வர்த்தகம் மற்றும் பயணத்தை எளிதாக்கும் வகையில், இந்தியாவின் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI) அமைப்பை இந்தோனேசியாவின் கட்டணச் செயல்முறை அமைப்புகளுடன் இணைக்கவும் தலைவர்கள் முடிவு செய்தனர்.

   iii. உத்திசார் உள்கட்டமைப்பு மற்றும் கல்வி

- இந்தியாவும் இந்தோனேசியாவும் இணைந்து இந்தோனேசியாவில் உள்ள சபங் (Sabang) துறைமுகத்தை மேம்படுத்தவுள்ளன.
- இத்துறைமுகம் இந்தியாவின் கிரேட் நிக்கோபார் திட்டப்பகுதியிலிருந்து வெறும் 100 மைல் தொலைவில், உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது.
- கல்வி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவாவில் உள்ள சிங்கசாரி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் இந்திய மேலாண்மை நிறுவனம் (IIM) பெங்களூருவின் வளாகம் ஒன்று அமைக்கப்படும்.
- கடந்த ஆண்டு துபாயில் சர்வதேச வளாகத்தை அமைத்த IIM அகமதாபாத்தின் முன்னெடுப்பைத் தொடர்ந்து இது மேற்கொள்ளப்படுகிறது.

iv. சுகாதாரம் மற்றும் மருந்துத் துறை

- இந்தியாவின் மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) மற்றும் இந்தோனேசியாவின் மருந்து மற்றும் உணவு கட்டுப்பாட்டு முகமை ஆகியவற்றிற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- உலகளாவிய மருத்துவ ஒழுங்குமுறைத் தரநிலைகள் குறித்த தகவல்களைப் பரிமாறிக் கொள்வது மற்றும் இந்தோனேசியாவில் உயர்தர இந்திய மருந்துகளுக்கான சந்தை வாய்ப்பை விரிவுபடுத்துவது ஆகியவற்றில் இந்த ஒப்பந்தம் கவனம் செலுத்துகிறது.
- பயிற்சி: இந்தோனேசிய மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு இந்தியா திறன் மேம்பாட்டுப் பயிற்சியை வழங்கும்.

v. ராஜதந்திர கௌரவங்கள் மற்றும் புவிசார் அரசியல் பார்வை

- இந்தோனேசியாவின் மிக உயர்ந்த குடிமகன் விருதான "பிந்தாங் அடிபூர்ணா" (Bintang Adipurna - Grand Star of the Order of the Republic of Indonesia) விருதை அதிபர் பிரபோவோ சுபியாண்டோ பிரதமர் மோடிக்கு வழங்கினார்.
- இந்தோ-பசிபிக் ஸ்திரத்தன்மை: சர்வதேச சட்டத்தால் நிர்வகிக்கப்படும் ஒரு சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக் மற்றும் கப்பல் போக்குவரத்து சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை இரு தலைவர்களும் வலியுறுத்தினர்.

- பாலஸ்தீனப் பிரச்சினைக்கு இரு-அரசுத் தீர்வுக்கான இந்தியாவின் ஆதரவை பிரதமர் மோடி மீண்டும் வலியுறுத்தியதோடு, உலகளாவிய மோதல்களைத் தீர்க்க இராஜதந்திரத்தைக் கடைப்பிடிக்கவும் அழைப்பு விடுத்தார்.
- 1955 பாண்டுங் மாநாட்டையும், அணிசேரா இயக்கத்தை நிறுவியதில் ஜவஹர்லால் நேரு மற்றும் சுகர்னோவின் அடித்தளப் பங்களிப்புகளையும் பிரதமர் குறிப்பிட்டார்.

2. ரூ.1,000 கோடி முதலீட்டில் 1,000 பேருக்கு உயர்தர தொழில்நுட்ப வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ஹிட்டாச்சி நிறுவனத்துடன் முதல்வர் ஜோசப் விஜய் முன்னிலையில் தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதுகுறித்து தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்ட செய்தி:

i. சென்னை போரூரில் உள்ள ஹிட்டாச்சி குழுமத்தைச் சேர்ந்த உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தின் விரிவாக்கத் திட்டத்துக்கும், செங்கல்பட்டில் உள்ள ஹிட்டாச்சி எனர்ஜி' இந்தியா நிறுவனத்தின் உற்பத்தித் திட்டத்தின் விரிவாக் கத்துக்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, 3 முதல் 5 ஆண்டுகளில் ரூ.1,000 கோடி முதலீடு செய்யப்படும். இதனால் கூடுதலாக 1,000 நபர்களுக்கு உயர்தர தொழில்நுட்ப வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

ii. ஹிட்டாச்சி குழுமம், உலகளாவிய ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் மற்றும் ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட்லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் இக்குழுமத்தின் துணை நிறுவனங்கள் ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. வீட்டில் இருந்தபடியே பத்திரப் பதிவு செய்யும் சேவை ஆகஸ்ட் 17-ஆம் தேதி முதல் கட்டாயமாக அமல்படுத்தப்படுகிறது என்று தெரிவித்துள்ள தமிழக அரசு, பத்திரப் பதிவுத் துறையில் மேற்கொள்ளப்படும் புதிய நடைமுறைகளைப் பட்டியலிட்டு அரசாணை வெளியிட்டுள்ளது.

i. பத்திரப்பதிவுத் துறையைநவீன மயமாக்கும் வகையில் 'ஸ்டார் 3.0 என்ற செயலியை பத்திரப் பதிவுத் துறை செயல்படுத்தியுள்ளது. இதில், கடைப்பிடிக்கப்படும் புதிய நடைமுறைகளை தமிழக அரசு பட்டியலிட்டு அரசாணை வெளியிட்டுள்ளது. அதில், முதல் விற்பனை மனை மற்றும் முதல்

விற்பனை அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு வீட்டில் இருந்தபடியே பத்திரப்பதிவு செய்யும் முறை ஆக.17-ஆம் தேதி முதல் கட்டாயமாக்கப்படுகிறது.

4. சீனாவின் பல்வேறு மாகாணங்களில் பெய்து வரும் பலத்த மழை காரணமான பாதிப்புகளில் சிக்கி இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளனர். 300-க்கும் மேற்பட்டோர் காயம டைந்தனர்.

   i. 'மேசாக்' புயல் காரணமாக பெய்து வரும் இத்தொடர் மழையால், சீனாவின் 62-க்கும் மேற்பட்ட முக்கிய நதிகளில் வெள்ள நீர் அபாயக் கட்டத்தைக் கடந்து பாய்கிறது. இதையொட்டி, சுமார் 54,000-க்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

5. இந்தியாவின் 'பால மனிதன்' என புகழ் பெற்ற கிரீஷ் பரத்வாஜ் (78) உடல் நலக் குறைவால் தனியார் மருத்துவமனையில் அதிகாலை காலமானார்.

   i. கர்நாடக மாநிலம், சுள்ளியா பகுதியை சேர்ந்தை இயந்திரவியல் பொறியாளரான கிரீஷ் பரத்வாஜ், தொடர்புகொள்ள முடியாத கிராமப்புறங்களை தொங்கு நடைபாலங்களால் இணைக்க 30 ஆண்டுகாலம் பாடுபட்டவர். குறைந்த விலை, புதுமையான தொங்கு நடைபாலங்களால், பள்ளிகள், மருத்துவமனைகள், சந்தைகளுக்குச் செல்ல பொதுமக்கள் செல்லும் வாய்ப்பு கிடைத்ததாக பொதுமக்களால் போற்றப்படுகிறார்.

   ii. கடந்த 1989-இல் கர்நாடக மாநிலத்தின் குடகு மாவட்டத்தில் உள்ள பாயஸ்வினி நதிக்கு இடையே முதல்முறையாக தொங்கு நடைபாலத்தை கிரீஷ் பரத்வாஜ் கட்டினார். கர்நாடகம், அதைத் தொடர்ந்து கேரளம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு மாநிலங்களில் தொங்கு நடைபாலங்களைக் கட்டியதால் 'சேதுபந்து' எனப் புகழ் பெற்றிருந்தார்.

   iii. ஊரகப் பகுதிகளை இணைப்பதிலும், பொது தொண்டில் ஈடுபடுவதில் அளப்பரிய பங்காற்றியதால், 2017-ஆம் ஆண்டு மத்திய அரசால் கிரீஷ் பரத்வாஜுக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

6. சமூகச் சீர்திருத்த முன்னோடியும், விளிம்புநிலை மக்களின் முன்னேற்றத்துக்காக பாடுபட்டவருமான இரட்டைமலை சீனிவாசன் பிறந்த தினத்தை (ஜூலை 7) முன்னிட்டு குடியரசு துணைத் தலைவர்

சி.பி.ராதாகிருஷ்ணன் தில்லியில் உள்ள குடியரசு துணைத் தலைவர் மாளிகையில் அவரின் உருவப்படத்துக்கு மரியாதை செலுத்தினார்.

7. தேர்தல் மேலாண்மை மற்றும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களைக்கொள் முதல் செய்ய இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்தோனேசியா மேற்கொள்ள உள்ளது.

i. சுமார் 29 கோடி மக்கள் தொகையுடன் உலகின் மூன்றாவது பெரிய ஜனநாயக நாடாக விளங்கி வரும் இந்தோனேசியா, தனது தேர்தல் நடைமுறைகளை நவீனமயமாக்கும் முயற்சியாக, தேர்தல் தொழில்நுட்பம், மேலாண்மை நிபுணத்துவம், நிறுவன ரீதியான ஆதரவு ஆகியவற்றைப் பெறுவதற்காக இந்தியாவை நாடியுள்ளது.

ii. உலகம் முழுவதும் உள்ள ஜனநாயக நாடுகள் நம்பகமான தேர்தல் நிபுணத்துவத்தை தேடும்போது, இந்தியாவே அவர்களின் முதல் தேர்வாக உள்ளது என்று இந்தோனேசியாவைக் குறிப்பிட்டு மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

iii. பூடான், நேபாளம், நமீபியா தற்போது இந்தோனேசியா நாடுகள் பின்பற்றுவதன் மூலமாக, இந்தியாவின் தேர்தல் நடைமுறை உலகளாவிய அளவுகோலாக உருவெடுத்துள்ளது.

iv. பூடான் முதல் நாடாக, இந்தியாவிடமிருந்து அதன் தனிப் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்ட மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியைப் பெற்றது.

v. நேபாளம், தனது முன்னோடி திட்டப் பயன்பாட்டுக்கென தனிப் பயன்பாட்டு மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மற்றும் நிறுவன ரீதியிலான ஆதரவை இந்தியாவிடமிருந்து பெற்றது.

vi. நமீபியா, இந்தியாவில் உருவாக்கப்பட்ட மின்னணுவாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் விவிபேட் இயந்திரங்களை தனது தேர்தல்களில் வெற்றிகரமாகப் பயன்படுத்தி வருகிறது.

vii. தற்போது, இந்தியாவிடமிருந்து தனிப் பயன்பாட்டு மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களைக் கொள்முதல் செய்ய இந்தோனேசியா ஒப்பந்தம் மேற்கொள்ள உள்ளது. அதன்படி, இரு நாடுகளிடையே தேர்தல் தொழில்நுட்பம், மனிதவள மேம்பாடு, திறன் மேம்பாடு, சிறந்த நடைமுறைகள் பரிமாற்றம் உள்ளிட்டவற்றில் ஒத்துழைப்பு மேம்படும் என்று

அதிகாரிகள் தெரிவித்தனர்.

viii. இந்தோனேசிய நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி பேசுகையில், '1955-ஆம் ஆண்டு நடைபெற்ற பாண்டுங் மாநாடு மூலம், சொந்த முடிவுகளை எடுக்க சுதந்திர நாடுகளுக்கு உரிமை உள்ளது என்ற செய்தியை அப்போதைய இந்திய பிரதமர் ஜவாஹர்லால் நேரு, இந்தோனேசியா அதிபர் சுகார்னோ ஆகியோர் உலகுக்கு தெளிவாக எடுத்துரைத்தனர்' என்று புகழ்ந்து பேசினார்.

- வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த மாநாட்டில் அப்போது புதிதாக சுதந்திரமடைந்த 29 ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் பங்கேற்றன. அந்த நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை ஊக்குவித்து, காலனியாதிக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடைபெற்ற அந்த மாநாடு, அணிசாரா நாடுகள் இயக்கத்துக்கு அடித்தளமிட்டது. இந்த மாநாட்டின் ஏற்பாட்டாளர்களில் ஒருவராக ஜவாஹர்லால் நேரு இருந்தார்.